பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 12 (24—4—68) புதன் ★ வெளியூர்: சித்திரை 13 (25—4—68) வியாழன் [இதழ்: 260

மே 15 முதல்...!

புதுடில்லி, ஏப். 24—

மே 15-ம் நாள் முதல் புதிய அஞ்சல் கட்டணங்கள் அமுலுக்கு வருகிறது.

புதிய கட்டணங்களின்படி, தபால் கார்டின் விலை 6 காசிலிருந்து 10 காசுக்கும்; 'இன்லண்டு லெட்ட'ரின் விலை 10 காசிலிருந்து 15 காசுக்கும்; அஞ்சல்உறையின் விலை 15 காசிலிருந்து 20 காசுக்கும் உயர்த்தப்படும்.

மணியார்டர் கமிஷனும் ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் 15 காசிலிருந்து 20 காசுக்கு உயருகிறது.

'ரிஜிஸ்டர் பார்சல்'கள்—தந்திக் கட்டணங்களும் உயருகின்றன.

புதிய கட்டண உயர்வு மூலம், டெல்லி அரசுக்குக் கூடுதலாக ரூ. 25 கோடி கிடைக்கும்.

செய்தியாளரை வியப்பில் ஆழ்த்தினர் அண்ணா

சிக்கல்மிக்க கேள்விகளுக்கு திறமை மிகுந்த பதில்கள்!

40 நிமிட நேரப் பேட்டி--பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் விளக்கம்

யேல் (நியூஹேவன்), ஏப். 23—

யேல் பல்கலைக் கழகத்தில் தங்கியிருக்கும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நேற்று (திங்கட்கிழமை) அமெரிக்கச் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்து, அவர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் பதிலளித்தார்; இந்தியாவின் அரசியல் - சமூக - பொருளாதார நிலை குறித்தும், இந்திய அரசின் கொள்கைகளையும் விளக்கினார்; மொழிப் பிரச்சினை, மாணவர்கள் கிளர்ச்சி, வெளிநாட்டுக் கொள்கை ஆகியவை குறித்தும் கருத்தறிவித்தார்.

செய்தியாளர்கள் எழுப்பிய பல சிக்கலான கேள்விகட்கும் திறமையாகப் பதிலளித்த அண்ணாவின் அறிவாற்றலைக் கண்டு செய்தியாளர்களே வியப்புத் தெரிவித்தனர்.

நாற்பது நிமிட நேரம் இந்தப் பேட்டி நடைபெற்றது; செய்தியாளர்கள், பல்வேறு பிரச்சினைகளையும் உள்ளடக்கி மிகச் சாமார்த்தியமாக அண்ணா அவர்களின் வாயைக் கிளறியும், அண்ணா அவர்கள் தமக்கே உரிய தனித் திறமையுடன் செய்தியாளர்களை வாயடைக்கச்செய்து, வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்தியிருக்கிறார்.

அண்ணா அவர்களை மகாத்மா காந்தியுடனும், கென்னடியுடனும் ஒரு செய்தியாளர் ஒப்பிட்டுக் கூறியபோது,

"என்னை மிகவும் பெரிய மனிதர்களுடன் ஒப்பிட்டுப் பேசுகிறீர்கள்"

என்று அண்ணா அவர்கள் தனக்கே உரித்தான அடக்கத்துடன் கூறினார்கள்.

"அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்குப் போட்டியிட விரும்பும் ராபர்ட் கென்னடி, மக்கார்தி ஆகிய இருவரில் யாரை நீங்கள் ஆதரிக்கிறீர்கள்—யார் குடியரசுத் தலைவராக வருவதை விரும்புகிறீர்கள்?" என்று ஒரு செய்தியாளர் கேட்டதற்கு அண்ணா அவர்கள்,

"இந்தியாவுக்கு யார் அதிக உதவி தருவாரோ அவரைத்தான் ஆதரிப்பேன்"

என்றார்.

"அமெரிக்காவின் உள்நாட்டு விவகாரங்களிலோ, வியட்நாம், மேற்காசியா போன்ற சர்ச்சைக்குரிய பிரச்சினைகளிலோ தலையிட்டுக் கருத்தறிவிக்க நான் விரும்பவில்லை" என்று அண்ணா அவர்கள் தெரிவித்துவிட்டார்கள்.

இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினைகள் பற்றிய வினாக்களுக்கு அவர் ஒளிவு மறைவு இல்லாது பதிலளித்தார்; ஆனால், வெளிநாட்டுக் கொள்கைத் தகராறு பற்றிக் கேட்கப்பட்டபோது, 'அவை மத்திய அரசைப் பொறுத்த விவகாரங்கள்' என்று கூறி, அவற்றில் தலையிட மறுத்துவிட்டார்; எனினும், தமது கட்சி மத்திய அரசாங்கக் கொள்கைகளைப் பொதுவாக ஆதரிப்பதாகத் தெரிவிக்கத் தவறவில்லை.

"சீனாவுடன் இந்தியாவுக்கு உள்ள மோதல் காரணமாகத்தான் இந்தியா மேலை நாடுகளின் பக்கம் சாய்கிறதா?" என்று ஒரு நிருபர் கேட்டபோது, "நாங்கள் சீனாவுக்கு எதிராக இருப்பதால்தான், மேலை நாடுகளில் சில எங்கள் பக்கம் சாய்கின்றன என்று சொல்வதுதான் மிகச்சரியானதாக இருக்கும்" என்று அண்ணா கூறினார்.

இந்திராவின் திறமை

இந்திரா அரசாங்கத்தின் சாதனை பற்றிய கேள்விக்கு அண்ணா அவர்கள் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"முன்னர் இந்தியா ஒரே கட்சி ஆட்சியின் கீழிருந்தது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்; ஆனால், பல மாநிலங்கள் காங்கிரசல்லாத நிலையில்—நான்காம் திட்டம் துவக்கப்படாத நிலையில்—வறட்சியின் காரணமாகத் தொழிலில் மந்த நிலை நிலவிய நிலையில்—இந்திரா காந்தி பதவிக்கு வந்தார்; இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கையில், அவர் நன்றாகவும், திறமையாகவும்தான் செயல்படுகிறார்.

"'அவர், 'அவசரப்பட்டு முடிவு எடுத்திருக்கக்கூடாது' என்று நான் கருதுகிற பிரச்சினை, மொழிப் பிரச்சினை ஒன்றுதான்"

என்று கூறிய அண்ணா அவர்கள், மொழிப் பிரச்சினை, சிக்கலுக்கு வந்தபோது, அச்சிக்கலின் பின்னணியையும், அரசியல் சட்ட மூல விதிகளையும், மறைந்த தலைமையமைச்சர் நேருவின் உறுதி மொழியையும், 'இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரையில் இணை ஆட்சிமொழியாக ஆங்கிலம் நீடிக்கும்' என்ற அந்த வாக்குறுதிக்குச் சட்டப்பூர்வ அங்கீகாரம் தருவதில் இந்திரா அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையையும் விளக்கி, மேலும் அதுபற்றிக் குறிப்பிட்டதாவது;—

"நேருவின் வாக்குறுதியைச் சட்டமாக்க முனைந்தமைக்காக நாங்கள் நன்றி செலுத்துகிறோம்; ஆனால் அதே வேளையில், இந்திக்கு ஆதரவாக இந்திரா, மற்றொரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டார். மத்திய அரசின் வேலை வாய்ப்புத் துறையில், மொழித் தீர்மானம், இந்தி பேசுவோருக்கே சாதகமாக இருக்கிறது."

சீனா வெற்றி பெற இடந்தரோம்!

கம்யூனிஸ்டுச் சீனா பற்றிய வினாவுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"சீனா முன்னர் இந்தியாவில் விழுங்கிய பகுதிகளை இன்னும் தன் வசமே வைத்துள்ளது; அண்மையில் அது முன்னேறவிடினும், நாங்கள் எப்போதும எச்சரிக்கையாக இருக்கிறோம் அதன் ஆக்கிரமிப்பு, வென்றுவிடாதபடி பார்த்துக்கொள்கிறோம்!"

இசுரேலுக்கு எதிரியா?

"'இந்தியா, இசுரேலுக்கு எதிராக உள்ளது' என்று பொதுவான ஓர் எண்ணம் நிலவுகிறது என்றாலும் அதை மறுக்கிறேன்.

"இந்தியா, இசுரேலுடன் ஓரளவு அரசியல் உறவுகளை வைத்துள்ளது; அரபு நாடுகளுடன் எங்கள் தொடர்பு மிக நீண்டகாலமாக இருந்து வருகிறது; என்றபோதிலும், இசுரேலுக்கு எதிராக நாங்கள் எதையும் சொல்லவில்லை."

உலக அரங்கில் இந்தியாவின் பங்கு

"இந்தியாவுக்கு உள்நாட்டிலேயே பல சொந்தச் சிக்கல்கள் உள்ளன; எனவே, அனைத்து நாட்டு விவகாரங்களில் பெரும் பங்கு எதையேனும் வகிப்பது இந்தியாவுக்கு இயலும் என நான் நினைக்கவில்லை.

"ஆனால், ஒரு நாட்டுக்கும்—மற்றொரு நாட்டுக்குமிடையே மத்தியஸ்தர்களாக—அமைதியையும் தோழமையையும் உண்டாக்கும் தூதுவர்களாக நாங்கள் பணியாற்ற முடியும்."

மாணவர் கிளர்ச்சியும் பெரியோர் அறிவுரையும்

மாணவர்கள் சக்தி பற்றியும், அரசியலில் அவர்கள் பங்குகொள்வது பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டபோது அண்ணா அவர்கள் அளித்த பதிலாவது:—

"மாணவர் கிளர்ச்சி என்பது உலகெங்குமுள்ள காட்சியாகும். அரசாங்கத்திற்கு ஆதரவாகச் சில காரியங்களைச் செய்யும்போது, மாணவர்கள் பாராட்டப்படுகிறார்கள்; ஆனால் அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தால், 'அரசியலில் கலந்துகொள்ளாதீர்கள்' என்று உடனடியாக அவர்கட்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

"இந்தியாவில் மாணவர்கள், பாகிஸ்தானுக்கோ சீனாவுக்கோ எதிராக ஆர்ப்பாட்டம் செய்கையில், அவர்களது பேராசிரியர்கள்கூட, அவர்களைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டுகிறார்கள்; ஆனால், மொழிச் சிக்கலுக்கு எதிராக அவர்கள் கிளர்ச்சி செய்யும்போது, அரசியலைவிட்டு விட்டுப் போகும்படி அவர்கள் கோரப்படுகிறார்கள்."

சட்டமன்ற மேலவை உறுப்பினராக ப. உ. சண்முகம்

இடைத் தேர்தலில் மகத்தான வெற்றி

ஆசிரியர்கள் பிரதிநிதியாக இரண்டாண்டுகள் பதவி வகிப்பார்

சென்னை, ஏப். 24—

கழக முன்னணித் தோழர்களில் ஒருவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. ப.உ. சண்முகம் அவர்கள் தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

வடஆற்காடு — தென்னாற்காடு மாவட்ட ஆசிரியர்கள் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் திரு. ப. உ. சண்முகம் கழக வேட்பாளராகப் போட்டியிட்டார்.

ஏப்ரல் 22-ஆம் நாள் வாக்குப் பதிவு நடைபெற்று, நேற்று (செவ்வாய்) வாக்குகள் எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்டது.

போட்டியிட்ட வேட்பாளர்களிலேயே மிக அதிக வாக்குகள் பெற்று மகத்தான வெற்றிபெற்றார் திரு. ப. உ. சண்முகம்.

வாக்குகள் விவரம்

மொத்த வாக்குகள்	2616
பதிவானவை	2045
ப. உ. சண்முகம்	1245
பரசுராம்	717
மணிஎழிலன்	5
செல்லாதவை	78

மணிஎழிலன் என்ற வேட்பாளர் பொறுப்புத் தொகை இழந்தார்.

டாக்டர் அ. சிதம்பரநாதனார் காலமானதால் மேலவையில் ஏற்பட்ட காலி இடத்துக்கு இந்த இடைத் தேர்தல் நடைபெற்றது.

1977 ஏப்ரல் 20-ஆம் நாள்வரை திரு. ப. உ. சண்முகம் ஆசிரியர்

(4-ம் பக்கம் பார்க்க)

எம். ஆர். இராதாவுக்குத் தண்டனை உறுதி--உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு

சென்னை, ஏப். 24—

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தானும் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொள்ள முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, மாவட்ட சேஷன்சு நீதிமன்றத்தில் ஏழாண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட எம். ஆர். இராதாவின் தண்டனை, உயர் நீதிமன்றத்திலும் உறுதி செய்யப்பட்டது.

செஷன்ஸ் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து எம். ஆர். இராதா சார்பில, உயர் நீதிமனறத்தில் அப்பீல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது தெரிந்ததே.

இன்று உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது; செஷன்ஸ் நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தண்டனையையே உயர் நீதிபதியும் உறுதி செய்து தீர்ப்பளித்தார்.

நம் நாடு
இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 12 (24—4—68) புதன்

வாயால் கெட்ட நுணல்!

'தமிழகத்தின் முதலமைச்சர்' என்ற முறையில், அமெரிக்க அரசு, அறிஞர் அண்ணா அவர்களை அழைத்திருக்கிறது. ஆனால் யேல் பல்கலைக் கழகம், 'முதலமைச்சர்' என்ற முறையில் அண்ணா அவர்களை அழைத்ததாகக் கொள்ளுவதற்கில்லை. 'அறிவாற்றல் மிக்க உலகத் தலைவர்களில் ஒருவர்' என்ற முறையில் அறிஞர் அண்ணா அவர்களைப் பல்கலைக் கழகத்துக்கு அழைத்திடல் வேண்டும்—பல்கலைக் கழகக் கோட்பாட்டின்படி அவருடன் ஐந்து நாள் உடனிருந்து உரையாடி உபசரிக்க வேண்டும்—அவருக்குப் பல்கலைக் கழகச் சார்பில் சிறப்புச் செய்தல் வேண்டும்—என்ற உயர்ந்த நோக்கத்தில்தான், அண்ணா அவர்களை யேல் பல்கலைக் கழகம் அழைத்திருத்தல் வேண்டும்—அப்படியே அழைத்தும் இருக்கிறது.

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இல்லாமல், 'முன்னேற்றக் கழகத் தலைவர்' என்ற அளவுடன் இருந்திட்டபோதிலும், அமெரிக்க அரசாங்கம் அவரை அழைத்திடாத நிலையிலும்கூட, அண்ணாவின் அறிவாற்றலுக்காகவும், சிறந்த நாத் திறம் பெற்றிருப்பவர் என்பதற்காகவும், நிச்சயமாக யேல் பல்கலைக் கழகம் அவரை அழைத்திருக்கும்—சிறப்பும் செய்திருக்கும்.

"சொலல் வல்லான் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு, நடமாடும் நாத் திறம் பெற்றவராக இன்று இருந்துவருகின்றவர் அண்ணா அவர்கள் ஆவார்கள். இம் மாபெரும் உண்மையை, அண்ணாவின் அரசியல் பகைவர்களும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து இதுவரையில் அமெரிக்காவுக்குப் பல அரசியல் தலைவர்கள் சென்றிருக்கின்றனர். பெரும்பாலும் அவர்கள் அனைவரையும் பத்திரிகை நிருபர்கள் சந்தித்துள்ளனர். அவர்கள் சந்திக்க மறுத்தாலும் விரும்பவில்லையானாலும், அவர்களை பத்திரிகை நிருபர்கள் சந்திக்காமல் இருந்ததில்லை.

இவ்வுண்மையை அறிஞர் அண்ணா அவர்கள் நன்கு அறிவார். அரசியலுக்கு அவர் புதியவரல்லர். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நாளிலேயே, அரசியலில் நேரடியாக அவர் தொடர்புகொண்டிருக்கவில்லையானாலும், அந்தக் காலத்தில் அவ்வப்பொழுது கிளம்பக்கூடிய அரசியல் பிரச்சினைகளைப் பற்றிக் கல்லூரிகளிலும், பட்டி மன்றங்களிலும் சொற்போர் புரிவதன் வாயிலாக, அரசியல் பயிற்சியைப் பெற்றிருக்கின்றார். ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் தமிழக அரசியலில் அவர், நேரடியாகப் பங்கு கொண்டிருக்கின்றார்.

ஒரு செப்பாலடித்த காசும் கையிலில்லாமல், கூட்டுத் தோழர்களின் ஒத்துழைப்புடன் சற்றேறக்குறைய இருபதாண்டுகளுக்கு முன் முன்னேற்றக் கழகத்தைத் துவக்கி—புற்றீசல்கள் போலவும் புயல் வேகத்திலும் கிளம்பிய தரங்கெட்டவர்களின் எதிர்ப்புக்கள் அனைத்தையும் தாங்கிக்கொண்டதுடன், அவ்வெதிர்ப்புக்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கிவிட்டு—'நாட்டாட்சிக்கு வாரிசுப் பாத்திய முறையில் தலைப்பிள்ளைகள் நாங்கள் மட்டுமேதான்' எனக் கூறிக்கொண்டு கோட்டையில் இருபதாண்டுக் காலமாகக் கோலோச்சிக் கொண்டிருந்த காங்கிரசுக் கட்சியினரை வெளியேற்றிவிட்டு—'ஆட்சி உரிமை மக்களுக்குச் சொந்தமானது' என்ற மக்களாட்சி உள்ளடக்கத்தை வெற்றிபெறச் செய்து—தமிழகத்தில் அரசமைத்து—அந்த சனநாயக அரசின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள இன்று வரையில், அறிஞர் அண்ணா அவர்களுக்கு அருந்துணை புரிந்துள்ள கருவூலமாக இருந்தவை எவை? அவர் பெற்றிருந்த—பெற்றுக்கொண்டே இருக்கும் கல்விச் செல்வமும் நா நலமும், தாங்கும் இதயமும், தன்னடக்கமும், **'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்'** என்ற குறள்நெறியைச் செயலாற்றும் பாங்கும்தான், இன்று கழக அரசாகத் தமிழகத்தில் அமைந்திருக்கிறது என்பது நூற்றுக்கு நூறும் உண்மை.

கல்விக் கலங்கரை விளக்கம்—சொல்லேருழவர்—பொறுமைப் பெருநிதி—தன்னடக்கத்தின் சிகரம்—பகைவரையும் நேசிக்கும் பண்பாளன்—இத்தகைய அறிஞருள் அறிஞராக இருந்திடக்கூடிய அறிஞர் அண்ணா அவர்கள், 'அரசியல் தலைவர்களைக் காணக் கூடாது—பத்திரிகை நிருபர்களைச் சந்திக்கக்கூடாது—பொருளாதார நிபுணர்களுடன் பேசக்கூடாது—எனத் தீர்மானித்துக் கொள்ளுவாரா? இப்படி அண்ணா அவர்கள் தீர்மானித்துக் கொள்ளுவார் என்ற நினைப்பு, எப்படித்தான் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் அவர்கள் மூளையில் பளிச்சிட்டதோ!

அறிஞர் அண்ணா அவர்களைக் குறித்துத் தமது விசித்திரமான மூளையில் தோன்றியதை, சுப்பிரமணியம் அவர்கள் வெளியிடாமலாவது இருந்திடக்கூடாதா? வெளியில் கூறாமலிருந்தாலாவது சுப்பிரமணியம் அவர்களின் அறியாமை, தமிழக மக்கள் அறிவுக் கண்களில் படாமலாவது இருந்திருக்குமே! 'நுணலும் தன் வாயால் கெடும்' என்ற கதைபோல், தமக்குள்ள அறியாமையை விளம்பரப் படுத்திக்கொண்டிருக்கின்றார்—தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம்.

—கா. க.

உயர்நிலை உருவாகும் வரையில் உழைப்போம்!

"மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் 20 ஆண்டு காலத்தில் போடப்பட்டிருக்கின்றன; இதற்கென இருபதாயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது; இத்தனைக்கும் பிறகு, காங்கிரசுக் கட்சியின் தலைவரே,' திட்டம் போட்டது உண்மை; ஆனால் அதன் பயன், ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேரவில்லை; கிராம மக்களுக்குப் பயனளிக்கவில்லை; பாட்டாளிகளுக்

(3-ம் பக்கம் பார்க்க)

திட்டக் குழுவா--சர்வாதிகார அமைப்பா?

அதற்கு இத்துணை அதிகாரம் வழங்கியவர் யார்?

தீட்டிய திட்டங்களில் ஒன்றேனும் வெற்றி பெற்றதுண்டா?

காங்கிரசு ஆட்சியின் 'சனநாயக சோஷலிசம்' வெற்று முழக்கமான கதை --- மக்களவையில் கந்தப்பன் இடித்துரை

'நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டும்' எனக்கோரும் தனி நபர் மசோதாவின்மீது நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் செ. கந்தப்பன் ஆற்றிய உரையின் முழு விவரம் இங்கு தரப்படுகிறது.

'திட்டக் குழு' என்ற பெயரில் இந்நாட்டில் இருந்துவரும்—யாருக்கும் கட்டுப்படாத மேலாதிக்கம் செலுத்தும் குழுவின் கடந்தகால நடவடிக்கைகள் குறித்தும், திட்டங்களின் பெயரால் பல கோடி ரூபாய் பணத்தைக் கொட்டிச் செலவிட்டும், அவை வெற்றிபெறாததற்குரிய காரணங்களைச் சுட்டிக்காட்டியும் காங்கிரசு ஆட்சியாளரின் கவைக்குதவா 'சனநாயக சோஷலிச முழக்கம்' பற்றியும் திரு. கந்தப்பன் தெளிவாக எடுத்துக் கூறி இடித்துரைத்திருக்கிறார்; அவர் உரை வருமாறு:—

அரசு தவறிவிட்டது!

"'பிள்ளையார் பிடிக்க, அது, குரங்காய் முடிந்தது' என்று தமிழில் ஒரு பழமொழியுண்டு. இந்தப் பழமொழி திட்டக் குழுவில் நடந்தவற்றுக்கும் சாலப் பொருந்தும்.

திட்டக் குழு உருவாக்கப்பட்ட தன் நோக்கம் பற்றிப் பிரமாதமாகப் பேசப்பட்டது; ஆனால், ஐந்து நிபுணர்களைக்கொண்டு திட்டக் குழு உருவாக்கப்பட்ட பின், அவர்களுடைய அனுபவங்களைப் பயன்படுத்திக்கொள்ள அரசு தவறிவிட்டது!

தொட்டால் துலங்காத சோஷலிச முழக்கம்!

உண்மையிலேயே, பாராட்டத்தக்க பல நல்ல காரியங்களை நாட்டுக்குச் செய்யக்கூடிய வகையில் திட்டக் குழுவை இயக்கவில்லை!

திட்டக் குழு உருவான பிறகு, இந்த நாட்டில் என்ன நடந்தது? இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவே திட்டக் குழு அமைக்கப்பட்டது. காங்கிரசுக்காரர்கள் பிரச்சினையின் ஊடே இருந்துகொண்டே சித்து விளையாடினர்!

ஆனால் அதேநேரத்தில், அந்தக் குழு பற்றி நாம் கருத்தறிவித்தால், நாம் திட்டத்துக்கே எதிராக இருப்பதாகக் கூறினர்.

நிலைமை அப்படியல்ல; துரதிருஷ்டவசமாக அவர்கள் எதைத் தொட்டாலும், அது துலங்குவதில்லை! அவர்களுடைய சோஷலிச முழக்கமும் அப்படித்தான்!

ஒருவேளை அவர்கள் அந்த முழக்கத்தை முழங்காதிருந்தால்கூட, இந்நாட்டில் அவர்கட்கு வாய்ப்பு நன்றாக இருந்திருக்கக்கூடும்!

சனநாயக சோஷலிசத் திர்மானத்தை நிறைவேற்றியான பிறகுதான், ஏகபோக உரிமை படைத்த நிறுவனங்களையும், ஏகபோக உரிமைபடைத்த குடும்பங்களையும் இந்நாட்டில் உருவாக்கினார்கள்! இதனால் மக்கள், அவர்களைப் பற்றி ஐயப்படலானார்கள்! அவர்களுடைய கொள்கைமீது நம்பிக்கை இழந்தனர்! எல்லாத் துறைகளிலும் இதுவே நிகழ்ந்தது!

திட்டக் குருவைப் பொறுத்தும் இதுவே நடந்திருக்கிறது!

மதிப்பை அல்லவா குறைத்துவிட்டனர்?

கடந்த மூன்றாண்டுக் காலத்தில், நாட்டில் திட்டமிடும் பணி நடைபெறவில்லை; ஆனால், 'திட்டமிட வேண்டும்' என்று வற்புறுத்தும் வகையில் மக்கள், கூக்குரலோ, கிளர்ச்சியோ, ஆரவாரமோ செய்யவில்லை!

துரதிருஷ்டவசமாக, இப்படிச் செய்வதற்குப் பதில் மக்கள், மனநிறைவு பெற்றவர்களாகவே இருக்கிறார்கள்!

உண்மையிலேயே சிலர், திட்டங்கள் இல்லை என்பதால் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்!

அரசு, தனது தவறான நடவடிக்கைகளின் மூலம், திட்டமிடும் பணிக்குரிய மதிப்பையே குறைத்துவிட்டிருப்பது வருந்தத்தக்க நிலையாகும்.

திட்டத்தை எவ்வாறு அணுகியது அரசு?

கடந்த மூன்று திட்டங்களிலும், நாம் எதைக் கண்டோம்? அதுவும், திட்டமிடுவது என்பதே பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியில் அணுகுவது தான்.

நமது திட்டங்களில் ஏதேனும் விஞ்ஞான ரீதியில் அணுகப்பட்டதுண்டா? அனைத்துந்திய அடிப்படையில் எந்தத் திட்டமேனும் அணுகப்பட்டதுண்டா? இந்நாட்டின் பொருளாதார நிலைக்கும், வருவாய்க்கும் தக்கபடி உண்மையான பொருளாதார அடிப்படையில் அணுகப்பட்டதா?

நிர்ணயித்த இலக்கு நிறைவேறாததற்குக் காரணம்?

திட்டக் குழு நிர்ணயித்த குறியளவுப்படி- வேளாண்மைத் துறையிலானாலும் சரி— இரசாயனத் துறையிலானாலும் சரி—ஏதாவது ஒரு துறையிலேனும் வெற்றி பெறவில்லை!

இந்தத் துறைகள், நிர்ணயித்திருந்த எந்த ஒரு இலச்சையும் எட்டவில்லை!

இதற்குக் காரணம் என்னவென்றால், இந்த நாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு, முழு அதிகாரம் படைத்தவர்கள் அவர்கள் ஆகமாட்டார்கள்; மத்திய அரசினருக்குக்கூட அந்த அதிகாரமில்லை; மாநிலங்களுக்குத்தான் அந்த உரிமை இருக்கவேண்டும்.

பொதுத் துறைக்கான திட்டங்களையும், மத்திய அரசின்கீழ் நேரடியாக வரும் சிலவற்றையும் பொறுத்தவரையில், அவர்கள் திட்டங்களைத் தீட்டி, அத்திட்டங்களை இறுதியாக நிறைவேற்றும் பொறுப்பை மத்திய அரசிடமே கொடுக்கவேண்டும்.

திட்டங்களை உண்மையிலேயே நிறைவேற்றக்கூடியவர்களை அவர்கள் (திட்டக் குழுவினர்) எப்போதாவது அனுசரித்திருக்கின்றனரா? இத்தனை ஆண்டுக் காலத்தில் இதுபற்றி அவர்கள் ஏதேனும் தேவையான அளவுக்குக் கருத்துத் தெரிவித்திருக்கின்றனரா?—என்று தலைமையமைச்சரைக் கேட்க விரும்புகிறேன்.

தொடர்பே இல்லாத விசித்திர நிலைமை

'தேசீய வளர்ச்சிக் குழு' என்று சொல்லப்படும் குழுகூட, ஆண்டுக்கு ஒரு முறைதான் கூடுவது வழக்கமாக உள்ளது; அதுவும், மிகக் குறைந்த கால அவகாச அறிவிப்புக் கொடுத்துத்தான் கூட்டப்படுகிறது; சுருக்கமான சில தகவல்களும், சில குறிப்புகளும் மட்டுமே அந்தக் குழுவினருக்கு வழங்கப்படுகின்றன. அவர்கள் அவற்றையெல்லாம் ஒப்புக்கொள்கிறார்களோ இல்லையோ—அரசு, திட்டத்தை நிறைவேற்ற முனைந்துவிடுகிறது.

அதுவும், எந்தத் திட்டத்துக்கு முன்னுரிமை என்பதையோ, மாநிலங்களின் நிலைமை எவ்வாறு உள்ளது என்பதையோ கூட அறிந்துகொள்வதில்லை

குறிப்பிட்ட மாநிலத்தின் பிரச்சினைகளை அணுகும்வகை என்ன என்பதையும் அறிந்துகொள்வதில்லை.

இத்தகைய போக்கின் விளைவுகளினால், திட்டத்தை நிறைவேற்றுவோருக்கும்—திட்டமிடுவோருக்கும் தொடர்பே இல்லாமற்போய்விடுகிறது!

தோல்வியுறுவதற்குக் காரணம் இதுதான்!

பெண்ணைப் பார்க்க அனுமதிக்காமலே பிள்ளைக்குத் திருமணம் செய்துவைக்கும் வைதீகர்களின் போக்கைப் போலவே இது உள்ளது. வைதீகத் திருமணத்தில் பெற்றோர்களே நாள் குறிக்கிறார்கள்; மணமகன் சென்று தாலி கட்டுகிறான்......

ஓர் உறுப்பினர்:— "இப்போது அந்த நிலை மாறிவிட்டது."

கந்தப்பன்:—சில இடங்களில் மட்டுமே அப்படி மாறியிருக்கிறது; துரதிருஷ்டவசமாக இந்த அரசு மாறவில்லை. அவர்கள் திட்டத்தைத் தீட்டி—அதை மணந்துகொள்ளுமாறு மாநிலத்தைக் கேட்கிறார்கள்; மாநிலங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், திருமணம் நடந்துவிடுகிறது!

இந்நாட்டின் திட்டங்கள் தோல்வியுறுவதற்கு இதுவே முழு முதற் காரணம் என்று நான் கூறவில்லை—இத்தகைய போக்கே பெரிதும் காரணமாகும்.

முடிவுசெய்யும் உரிமை மாநிலங்கட்கு அவசியம்!

நிர்வாகச் சீர்திருத்தக் குழு ஒரு யோசனை தெரிவித்துள்ளது; அந்த யோசனையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாநில மட்டத்தில் திட்டக் குழுக்கள் அல்லது திட்டத் துறைகள் இருந்துவருவது பற்றி அவர்கள் யோசிப்பதாகக் கருதுகிறேன். இந்த அடிப்படையில் திட்டமிடத் துவங்கவேண்டும்; மாநில அடிப்படையில் திட்டங்கள் திட்டப்பட வேண்டும்.

மாநிலங்கள் திட்டக் குழுவுடன் தொடர்பு கொள்ளவும், இறுதி முடிவு செய்யும் வகையிலும் அவர்கட்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

எந்தெந்தத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது என்பதை முடிவு செய்யும் உரிமையும் அவர்களுக்கு இருக்கவேண்டும்.

இந்தச் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்; இல்லையேல் நாம் திட்டங்களில் நிச்சயம் வெற்றி பெற முடியாது.

நமது திட்டக் குழுவை பெரும்பாலும் ஒரு நிபுணர் குழுவாக

(3-ம் பக்கம் பார்க்க)